

# ජනාධිපති කාර්යාලය
# சனாதிபதி அலுவலகம்
# PRESIDENTIAL SECRETARIAT

## இந்தியா, ஹைதராபாத்திலுள்ள ஆங்கிலமொழி, பிறநாட்டு மொழிகளுக்கான பல்கலைக்கழகத்தில் (EFLU) தொழில்திசைமுகப்படுத்திய தொடர்பாடல்/ பேச்சு ஆங்கிலமொழி ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சிபெறுவதற்காக புலமைப்பரிசில் வழங்கல்

இந்நாட்டில் ஆங்கிலமொழி கற்பிப்பதற்காக தொழில்திசைமுகப்படுத்திய தொடர்பாடல்/பேச்சு ஆங்கிலமொழி கற்பித்தல் முறைகளையும் கற்கைநெறி உள்ளீடுகளையும் அறிமுகஞ்செய்துவைப்பதற்கு "ஆங்கிலமொழியும் தகவல் தொழினுட்பவியலும்" பற்றிய சனாதிபதி செயலணியினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முன்னெடுப்புக்கு உதவுமுகமாக, அரசதுறை பாடசாலைகளை நோக்கி இதனை நகர்த்திச்செல்லும் பொருட்டு ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சிபெறுவதற்காக, ஹைதராபாத்திலுள்ள ஆங்கிலமொழி, பிறநாட்டு மொழிகளுக்கான பல்கலைக்கழகத்தின் 40 புலமைப்பரிசில்கள் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலம், மூன்று (03) மாதங்களாகும். புலமைப்பரிசில் வழங்கல் மாகாணங்களுக்கு இடையில் நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

பின்வரும் மூலப்பிரமாணங்களைப் பூர்த்திசெய்யும், ஆங்கிலமொழியை ஒரு பாடமாகக்கொண்டு பட்டம்பெற்றுள்ள அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள், உள்ளக சேவை ஆலோசகர்கள், பிராந்திய ஆங்கிலமொழி வளத்துணை மத்தியநிலையங்களின் பயிற்றுவிப்பாளர் பதவியினரிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயதெல்லை:** விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று 45 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**தகைமைகள்:**

1. ஆங்கிலமொழியை ஒரு பாடமாகக்கொண்டு பட்டம் பெற்றிருத்தல் அல்லது,
2. ஆங்கிலமொழியில் பட்டப்பின்படிப்பு தகைமைகளுடன் எந்தவொரு பாடத்திலும் பட்டம் பெற்றிருத்தல் அல்லது,
3. ஆங்கிலமொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் (TESL) தொடர்பான டிப்புளோமாவுடன் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது,
4. ஆங்கிலக் கல்வியில் கல்விமாணிப் பட்டத்துடன், ஆங்கிலமொழி கற்பித்தலில் தேசிய டிப்புளோமா பெற்றிருத்தல்.

**தேர்வு:** கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தேர்வு இடம்பெறும்.
பயிற்சிபெறுநர்கள் "வாழ்க்கைத் திறனொன்றாக ஆங்கிலமொழி" நிகழ்ச்சித்திட்டத்தின் சேவையின் தேவைகளுக்காக இலங்கையின் ஆசிரியர் மத்தியநிலையங்களில் ஏதாவதொன்றில் இணைந்து பணியாற்ற இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி:** 2011 யூலை மாதம் 22ஆந் திகதி.

**விண்ணப்பப்படிவங்கள்:** சனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலிருந்து (www.president.gov.lk) அல்லது கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலிருந்து (www.moe.gov.lk) பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து "EFLU ஹைதராபாத்" என கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிட்டு, அக்கடித உறையிலிட்டு "நிகழ்ச்சித்திட்ட இணைப்பு உத்தியோகத்தர், சனாதிபதி நிகழ்ச்சித்திட்டக்கூறு, நான்காவது மாடி, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

சுனிமல் பெர்னாந்து
சனாதிபதியின் ஆலோசகர், ஒருங்கிணைப்பாளர் (ஆங்கிலமொழி) மற்றும்
"ஆங்கிலமொழியும் தகவல் தொழினுட்பவியலும்" பற்றிய சனாதிபதி செயலணியின் ஏற்பாட்டாளர்